**திருவேற்காடு நகராட்சி**

**நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் நாள் திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 25.01.2021**

---

## பொருள் எண்.1

சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம் நொளம்பூர் கிராமம் - புல எண் 105/1 விஸ்தீரணம் 2.37.5 ஹெக்டேர் மேய்க்கால் வகைபாடு கொண்ட அரசு புறம்போக்கு நிலத்தில் முஸ்லீம் மயான பூமி அமைக்க இடம் கோரி கால்நடை பராமரிப்பு துறைக்கு மாற்றிடமாக திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டம் புளியம்பேடு கிராமம், புல எண் 19/3 புஞ்சை அனாதீனம் வகைபாடு விஸ்தீரணம் 0.82.5 ஏர்ஸ் நிலத்தில் 0.40.5 ஏர்ஸ் நிலம் தேர்வு செய்து பிரேரனை அனுப்பப்பட்டுள்ளதாக பூந்தமல்லி வட்டாட்சியரிடமிருந்து ந.க.எண். 433/2021/ஆ1 நாள் 25.01.2021 ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி சர்வே எண் 19/3 ல் உள்ள இடமானது வருவாய் துறைக்கு சொந்தமான அனாதீனம் வகைபாடு கொண்ட இடமாகும். மேற்படி நிலத்தை மாற்றிடமாக வழங்குவதற்கு நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்பதையும், அந்நிலம் மேய்க்கால் இடமாக மாற்ற தகுதியாக உள்ளது என்பதையும் பூந்தமல்லி வட்டாட்சியருக்கு தெரிவித்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 505 /2021/எப்1)

**அலுவலக குறிப்பு :-**
மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண்.1378** **நாள்.25.01.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.2

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சாலைகள் பழுதடைந்துள்ளதாலும், மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற வழிவகை இல்லதததாலும் மேற்படி பகுதியில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ள அதற்காக சிப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 17 | சக்ரிஷ்வரர் நகர் முதல் கஸ்தூரிபாய் அவென்யூ வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல். | 0.640 | 4.10 | 124.00 |
| 2. | II | 17 | ராம் நகர் முதல் கஸ்தூரிபாய் அவென்யூ 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல். | 0.640 | 4.10 | 126.00 |
| | | | **மொத்தம்** | **1.280** | | **250.00** |

**அலுவலக குறிப்பு :–**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020–21 (பகுதி–II) ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1379** **நாள்.25.01.2021**

**தீர்மானம் : அ) அனுமதிக்கப்படுகிறது. ஆ) அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.3

திருவேற்காடு நகராட்சி சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குள் சென்னையிலிருந்து 16 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 62289 ஆகும். இந்நகராட்சி 28.50சதுர கி.மீட்டர் பரப்பளவில் 18 வார்டுகள் உள்ளடக்கியுள்ளது. அதனை தொடர்ந்து, இந்நகராட்சி வழியாக கூவம் ஆறு செல்வதால் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீர் கால்வாய் வழியாக சென்று கூவம் ஆற்றை சென்றடைகிறது. மேலும், இந்நகராட்சி அமைந்துள்ள நீர்நிலைகளான அயனம்பாக்கம் ஏரி, கோலடி ஏரி, வீரராகவபுரம் ஏரி, கூவம் ஆறுகள் ஆகும். மேலும், இந்நகராட்சி பகுதியில் 24.50 கீ.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் அமைந்துள்ளது. மேலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிரந்தர வெள்ள தடுப்பு பணியாக ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் 12.294 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மேலும், தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் விதமாக ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 15.897 கி.மீ நீளத்திற்கு 12 சிப்பங்களாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண். | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | I | 1 | எட்டீஸ்வரன் கோயில் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 0.950 | 150.00 |
| 2. | II | 4 | ஐஸ்வர்யா நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, குறுக்கு தெருக்கள், பாரதியார் தெரு, குறுக்கு தெருக்கள் மற்றும் யாகவ மங்கள் ராஜ் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 2.274 | 355.00 |
| 3. | III | 6 & 12 | வடநூம்பல் பிரதான சாலை மற்றும் பல்லவன் நகர் 1வது பிரதான சாலைகளுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.054 | 165.00 |
| 4. | IV | 8 | நூம்பல் ஜட்ஜஸ் காலனி பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 0.671 | 105.00 |
| 5. | V | 14 | கற்பகாம்பாள் நகர், கிருஷ்ணா நகர் மற்றும் கோவிந்தராஜ் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.197 | 190.00 |
| 6. | VI | 15 | கருமாரியம்மன் நகர் 1வது தெரு, 2வது தெரு, குறுக்கு தெரு, நடேசனர் நகர் பிரதான சாலை, நடேசனர் 1வது தெரு, மற்றும் நடேசனர் 2வது தெரு மற்றும் அபிராமி நகர் பகுதிக்கு மழைநீர் | 1.390 | 220.00 |

| வ. எண் | சிப்பம் எண். | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | | | வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | | |
| 7. | VII | 15 | ஈஸ்வரன் நகர் 1வது தெரு, 2வது, 3வது, 4வது, 5வது, 6வது, 7வது, 8வது, குறுக்கு தெருக்கள் மற்றும் கீரின் பார்க் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.400 | 220.00 |
| 8. | VIII | 16 & 17 | காடுவெட்டி பிள்ளையார் கோயில் தெரு, காயத்ரி நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, எல்.கே.பி நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.855 | 290.00 |
| 9. | IX | 17 | ஏழுமலை நகர் 1வது தெரு, 2வது தெரு, 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு, 3வது குறுக்கு தெரு, 4வது குறுக்கு தெரு, 5வது குறுக்கு தெரு மற்றும் 6வது குறுக்கு தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.125 | 180.00 |
| 10. | X | 17 | ராம் நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு மற்றும் 5வது தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.005 | 160.00 |
| 11. | XI | 17 | சக்ரீஸ்வரர் நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, 6வது தெரு, 1வது குறுக்கு தெரு மற்றும் 2வது குறுக்கு தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.288 | 200.00 |
| 12. | XII | 17 | அழகர்சாமி நகர், கஸ்தூரிபாய் நகர் 1வது தெரு, கஸ்தூரிபாய் நகர் 2வது தெரு, கஸ்தூரிபாய் நகர் 3வது தெரு, கஸ்தூரிபாய் நகர் 1வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர் 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர் 3வது குறுக்கு தெரு, அன்பு நகர், முருகன் நகர் 1வது, 2வது, 3வது, 4வது, 5வது, 6வது தெருக்கள் மற்றும் அரவிந்த நகர் குறுக்கு தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 1.688 | 265.00 |
| | | | **மொத்தம்** | **15.897** | **2500.00** |

**அலுவலக குறிப்பு :–**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.2500.00 இலட்சம் மதிப்பீட்டில் 12 சிப்பங்களாக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி **(SDRF)** 2020–2021 ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1380** **நாள்.25.01.2021**

**தீர்மானம் : அ) ஆ) அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண்.4</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2 | நியூ சென்சூரியன் முதல் ராம்பூர்னா நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 34.00 |
| 2. | 2 | ராம்பூர்னா நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 38.00 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1381** **நாள்.31.12.2020**

**தீர்மானம் : அ) ஆ) அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண்.5</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 மற்றும் 11–ல் மாதிராவேடு பிள்ளையார் கோயில் தெரு மற்றும் எல்லையம்மன் கோயில் தெரு மேல்நிலைநீர்தேக்க தொட்டி அமைந்துள்ள பகுதியில், பொதுமக்களின் குடிநீர் அவசியத்தினை கருதி புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கவும், மாதிராவேடு பகுதியில் குடிநீர் விநியோக குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1382** **நாள்.25.01.2021**

**தீர்மானம் : அ) ஆ) அனுமதிக்கப்படுகிறது.**

---

ஒம்/– தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.